செ.வெ.எண்.07 நாள்:01-09-201

# வேளாண்மைத்துறை

## அங்ககசான்றளிப்பு விழிப்புணர்வு பயிற்சி

நாங்குநேரி வட்டாரத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) விரிவாக்க சீரமைப்பு திட்டம் (SSEPERS) 2017-18 ன் கீழ் விதைச்சான்றளிப்புத்துறைக்கு ஒதுக்கப்பட்ட அங்கக சான்றளிப்பு விழிப்புணர்வு விவசாயிகள் பயிற்சி நாங்குநேரி வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நடத்தப்பட்டது.இது தொடர்பாக நாங்குநேரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் இரா.ஜோ தேடியஸ் அவர்கள் தெரிவித்ததாவது.

நாங்குநேரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் இரா.ஜோ தேடியஸ் அவர்கள் பயிற்சியை துவக்கி வைத்து துவக்க உரை ஆற்றினார்.அங்கக சான்று ஆய்வாளர் தி.இல .நாராயணமூர்த்தி அவர்கள் செயல்விளக்கத்தோடு அங்கக சான்றளிப்பு பற்றி தெளிவாக எடுத்து கூறினார். விதைச்சான்று உதவி இயக்குநர் திருநெல்வேலி திருமதி.சரஸ்வதி அவர்கள் அங்கக சான்றளிப்பு பற்றி தெளிவான கருத்துகளை எடுத்து கூறினார். இயற்கை விவசாயி திரு. ராமகிருஸ்ணன் அவர்கள் அங்கக சான்றளிப்பு பற்றி தனது அனுபவத்தை எடுத்து கூறினார். இறுதியில் வட்டார தொழில் நுட்ப மேலாளர் செல்வி.ரா.ஆமினி நன்றிவுரை ஆற்றினார் சுமார் 50 விவசாயிகள் கலந்து கொண்ட இப்பயிற்சியினை அட்மா திட்ட உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் திரு.சுடலைமுத்து மற்றும் ஜஸ்டின்கிங்ஸ்டன் ஆகியோர் கூட்டாக ஏற்பாடு செய்திருந்தனர்.

for, [signature]
ASSISTANT DIRECTOR OF AGRICULTURE
NANGUNERI

வெளியீடு

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி.